**நெல்லியாளம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் வரும் 27.07.2022 ஆம் தேதி காலை புதன்கிழமை 10.00 மணிக்கு இந்நகராட்சியின் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெறவிருப்பதால் இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

**நகர்மன்ற தலைவர்,**
**நெல்லியாளம் நகராட்சி**

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் திரு.பாலசந்தர், ஸ்ரீ வெங்கடேஷ்வரா டிரான்ஸ்போர்ட்டு, என்பவர் தனக்கு வழங்கப்படவேண்டிய வைப்பு தொகை நிலுவையினை வழங்க கோரி மனு சமர்ப்பித்துள்ளார்கள். 2018–2019 வரையிலான வருடத்திற்கான வைப்பு தொகைகள் Lapsed Register-க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் ரூ.59332/–ஐ திரு.பாலசந்தர், ஸ்ரீ வெங்கடேஷ்வரா டிரான்ஸ்போர்ட்டு, அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.பாலசந்தர், ஸ்ரீ வெங்கடேஷ்வரா டிரான்ஸ்போர்ட்டு | 59332/– |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.110 /2022, நாள்.27.07.2022/ மன்றம் அனுமதி வழங்கலாம்**

**பொருள் எண்.2**

நெல்லியாளம் நகராட்சிக்கு புதிதாக வாங்கப்படவுள்ள இரண்டு ஈப்பு வகானங்களுக்கு காலமுறை ஊதியத்தில் அரசாணை எண்.1262, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள்.30.08.1983 மற்றும் அரசாணை எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.15.05.1997–ன்படி, ஒரு வாகனத்திற்கு ஒரு ஒட்டுநர் வீதம், இரண்டு ஈப்பு வாகனங்களுக்கு இரண்டு ஓட்டுநர் பணியிடங்களை தோற்றுவித்து, இவ்வலுவலக நிரந்தரமான, தகுதியுடைய கீழ்நிலை பணியாளர்களை (Eligible Last Grade Servants) கொண்டு நிரப்பிக்கொள்ளவதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு:

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவருக்கும், அலுவலக பயன்பாட்டிற்கும் ஒரு ஸ்கார்பியோ மற்றும் ஒரு பொலிரோ ஈப்பு வாகனங்கள் நகராட்சி பொது நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளவும், அந்த வாகனத்தை இயக்குவதற்கு தகுதியான ஒட்டுநர்கள் இல்லாத பட்சத்தில் ஒப்பந்த அடிப்படையில் TEXCO ON CONTRACT BASIS மூலம் தினக்கூலி அடிப்படையில் நியமித்துக்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது செயல்முறையில் ந.க.எண்.11135/2022/எம்3, நாள்.06.05.2022–ல் உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

புதிய வாகனங்கள் வாங்குவதற்கு உரிய தொகையை சென்னை நகராட்சி நிர்வாக

இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட மகேந்திரா அன்ட் மகேந்திரா நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுவிட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவில், தகுதியான ஒட்டுநர்கள் இல்லாத பட்சத்தில் TEXCO ON CONTRACT BASIS மூலம் நியமனம் செய்துகொள்ளலாம் என தெரிவித்ததன்படி, இரானுவத்திலிருந்து பணி ஒய்வு பெற்றவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பணிபுரிவோம் என்று தெரிவிப்பனர். இது ஏற்புடையதல்ல, காரணம், நெல்லியாளம் நகராட்சியிலிருந்து திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் 180 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால், 100 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலைகள் குண்டும், குழியுமாக சேதமடைந்த குறுகிய மலைப்பாதையில் சென்றடைந்து ஆய்வுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு திரும்பி நெல்லியாளத்திற்கு வரும்பொழுது 20 மணி முதல் 24 மணி நேரம் வரை ஆகிறது. கால நேரங்களை பார்க்காது TEXCO நிறுவனத்தார் அவ்வாறு பணிபுரிவதற்கு வாய்ப்பில்லை. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அட்டவணைப்படுத்தப்பட்ட விலை விகிதத்தின் (Schedule of Rates in Daily Wages) அடிப்படையில் ஆட்களை தினக்கூலி அடிப்படையில் நியமித்தாலும் அதே நிலையில் தான் இருப்பர். மேலும், இவ்வாறான சூழ்நிலையில் இவ்வளவு அதிகபடியான தொகையை சொலுத்தி வாங்கிய வாகனங்களை அவ்வாறு உள்ளவர்களிடம் ஒப்படைப்பது ஏற்புடையதாக இருக்காது.

மேலும், ஒரு TEXCO ஒட்டுநர் மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அட்டவணைப்படுத்தப்பட்ட தினக்கூலி ஒட்டுநருக்கு சுமார் ரூ.708/– (இத்தொகை 2022–2023–ஆம் ஆண்டிற்கு அதிகமாவதற்கு வாய்ப்புள்ளது) 708X30=21240 மற்றும் அன்னாருக்கு செலுத்த வேண்டிய EPF மற்றும் காப்பீட்டுத் தொகையுடன் மாதம் ஒன்றிற்கு ரூ.30269/– செலவிட நேர்கிறது. இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளருக்கும், TEXCO ஒட்டுநருக்கு வழங்கப்படும் தினக்கூலி ஊதியம் மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அட்டவணைப்படுத்தப்பட்ட தினக்கூலி ஊதியத்திற்கும் உள்ள ஊதிய வித்தியாசத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

<table>
<tr><td colspan="3">அலுவலக உதவியாளர் தற்பொழுது பெற்று வரும் ஊதியம் ரூ.</td><td>பதவி உயர்வு வழங்கினால் வழங்கப்படும் ஊதியம் ரூ.</td><td rowspan="2">கூடுதல் வித்தியாசம் ரூ.</td><td rowspan="2">தினக்கூலி TEXCO ஒட்டுநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் அட்டவணைப்படுத்தப் பட்ட தினக்கூலி ஒட்டுநர் ஒருவருக்கு EPF, Insurance போன்றவைகளுடன் சேர்த்து ஒரு மாத ஒட்டுமொத்த ஊதியம் ரூ.</td></tr>
<tr><td colspan="3">(P.B-1Aரூ.4800–1000)<br>Pay Matrix 15700–50000</td><td>(P.B-1Bரூ.5200–20200)<br>Pay Matrix 19500–62000</td></tr>
<tr><td>PAY</td><td>:</td><td>23100</td><td>24000</td><td>900</td><td>30269</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SPL PAY | : | 90 | 0 | 90 | |
| DA | : | 7161 | 9145 | 1984 | |
| HRA | : | 700 | 800 | 100 | |
| M.A | : | 300 | 300 | 0 | |
| W.A | : | 200 | 200 | 0 | |
| H.A | : | 4620 | 5900 | 1280 | |
| WIN.A | : | 1155 | 1475 | 320 | |
| O.A | : | 100 | 0 | 100 | |
| | | **37426** | **41820** | **4774-380=4394** | **30269** |

TEXCO ஒட்டுநருக்கோ அல்லது நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அட்டவணைப்படுத்தப்பட்ட தினக்கூலி ஒட்டுநருக்கோ, ஒரு நபருக்கு தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கினால் ரூ.30269–4394=25875X12 மாதங்களுக்கு=310500 ஆகிறது. மேற்படி, அலுவலக உதவியாளருக்கு பதவி உயர்வு வழங்கி ஒட்டுநராக பணியமர்த்தினால் மாதம் ஒன்றிற்கு ரூ.4394/– வீதம் 12 மாதங்களுக்கு ரூ.52728/– செலவாகிறது. இதில் ரூ.310500–ரூ.52728=ரூ.257772/– (ஆண்டு ஒன்றிற்கு), இரண்டு ஒட்நர்களுக்கு ரூ.2X257772=515544/– (ஆண்டு ஒன்றிற்கு) நகராட்சிக்கு மீதமாகிறது. மேலும் இந்நகராட்சியின் பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினம் 28.45 சதவீதமாக உள்ளது.

எனவே, இரண்டு ஈப்பு வாகனங்களுக்கு அரசாணைகளின்படி, இரண்டு ஒட்டுநர் பணியிடங்களை தோற்றுவித்துக்கொள்ளவும், தகுதியுள்ள இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்நிலை பணியாளர்களை கொண்டு மேற்காண் பணியிடங்களை நிரப்பிக்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.111 /2022, நாள்.27.07.2022 / மன்றம் ஒத்திவைக்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.3</u>**

2021–2022ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் ( MLACDS) நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா அட்டி சாலை தடுப்பு சுவர் அமைத்தல் ரூ.3.00 இலட்சத்திற்கு 13.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.M.K.சுகைப், ஒப்பந்ததாரர் | 0.01 % குறைவு |
| 2 | திரு.M.K.நசுருதீன், ஒப்பந்ததாரர் | 0.31 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.M.K.சுகைப், ஒப்பந்ததாரர் என்பவர் 0.01% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் திட்டப்பணி என்பதால் பணி உத்திரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.112 /2022, நாள்.27.07.2022/ மன்றம்அனுமதி வழங்கலாம்.</u>**

ஒப்பம்

**(<u>திருமதி. சி.சிவகாமி.</u>)**

நகர்மன்ற தலைவர்,

நெல்லியாளம் நகராட்சி.

**<u>// உண்மை நகல் //</u>**

ஆணையாளர்,

நெல்லியாளம் நகராட்சி.